www.tamilarangam.net

2/1

# 'வட்டமேசைமாநாடு பலன்தராது இந்திய அரசு மாற்றுயோசனை செய்யவேண்டும்'

## தமிழக வருவாய்த்துறை அமைச்சர் பேச்சு

வீரகேசரி 16-04-84

மதுரை,

இலங்கைத் தமிழர்களுக்கு புகலிடம் கொடுக்கப்படுவதாகவும், பயிற்சி கொடுக்கப்படுவதாகவும் வேண்டுமென்றே சுமத்தப்படும் பழிகளில் எதுவித அர்த்தமுமில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் தேவையான பலன் தரவில்லை. இலங்கையில் கூட்டப்பட்ட வட்ட மேசை மாநாட்டினால் எந்தவித நன்மையும் ஏற்படவில்லை.

எனவே, உடனடியாக சிந்தித்து இந்திய அரசு மாற்று யோசனை எடுக்க வேண்டும். இல்லையெனில் இலங்கைத் தீவில் தமிழினமே இல்லாமல் அழிந்துவிடும்.

இவ்வாறு தமிழக வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் கூறினார்.

நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கென வட்ட மேசை மாநாடு நடத்தப்பட்டது. ஆனால் எந்தவித முடிவும் எடுக்கப்படாமல் முடிந்திருக்கிறது. வட்ட மேசை மாநாடு நடக்கவிருக்கும் போது கூட அங்கு கலவரம் நடந்திருக்கிறது. இந்த மாநாட்டினால் எதுவிதமான நன்மையும் ஏற்படவில்லை.

இலங்கைத் தமிழர்களுக்கு உடனடியாக பாதுகாப்பு கொடுக்காவிட்டால் கடந்த ஜூலையில் ஏற்பட்ட கொடுமைகளைவிட பல மடங்கு கொடுமைகள் செய்யப்படலாம்.

மத்திய அரசு இதுவரை எடுத்த முயற்சிகளுக்கும், அவர் களது நல்லெண்ணத்துக்கும் எனது பாராட்டுக்கள். ஆனால் மத்திய அரசின் நல்லெண்ணத்தை இலங்கை அரசு மதித்ததாகத் தெரியவில்லை. உதாரணம் சொல்வதானால், வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் அங்கு சென்றபோது தமிழ்த் தலைவர்களைச் சந்திக்கும் போது அனுமதிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட தமிழர்கள் தங்கியிருந்த அகதிகள் முகாமுக்குச் சென்று அவர்கள் கூற வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதுதான் தமிழர்கள் மீது காட்டும் பிரிவுக்கு ஒரு எடுத்துக் காட்டு.

எனவே தான், மாற்று யோசனை பற்றி மத்திய அரசு உடனடியாக சிந்தித்து செயற்பட வேண்டும். இது ஒரு இனத்தைக் காக்கும் பிரச்சினை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு திரு. சோமசுந்தரம் கூறினார்.

# விடுதலை அமைப்புகளுடன் 23, 24இல் பேச்சுவார்த்தை

## எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை ஏப்.14

இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண கூட்டப்பட்டிருக்கும் வட்ட மேசை மாநாட்டில் மதிப்பும், மரியாதையும் இல்லை என்ற சூழ்நிலை ஏற்படுமானால் தமிழ் நாட்டின் தலையீட்டைத் தவிர வேறு வழியில்லை. எனினும் அந்த நிலை தமிழகத்துக்கு ஏற்படாது என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகவும் தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் இன்று திருச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் மக்களின் படுகொலை சம்பந்தப்பட்ட விவகாரத்தை நீண்ட காலத்துக்கு தள்ளி வைக்க முடியாது. இவ்விவகாரம் ஏமாற்றத்தை தருகிறது என்றும் திரு. இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:—

இலங்கை விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் விடுதலை அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

அதன் பின்னர் அகில இந்திய அண்ணா தி. மு. கழகத்தின் செயல்முறை என்ன என்பது அறிவிக்கப்படும் என்றார்.

---

வீரகேசரி 16-04-84

# 'இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இராணுவ நடவடிக்கை வேண்டும்'

## தி. மு. க. தலைவர் கருணாநிதி வலியுறுத்து இன்றேல் பிரிவினை கோருவோம் என்கிறார்

சென்னை, ஏப். 15

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு இராணுவரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் தி. மு. க. தனது பிரிவினை கோரிக்கையை மீண்டும் எழுப்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று மாலை இங்கு பெரியார் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது மீண்டும் வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இதனைத்தடுக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதை வலியுறுத்து முகமாக தமிழக முதல்வர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், எம்.பி.க்கள் ஆகியோர் கூட்டாக ராஜினாமா செய்யவேண்டும் எனவும் திரு. கருணாநிதி வேண்டுகோள்விடுத்தார்.

பொதுக்கூட்டத்திற்கு முன்னர் தி. மு. க., தி. க. காந்தி காமராஜ் காங்கிரஸ், உழைப்பாளர் கட்சி ஆகியன பேரணி ஒன்றை இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நடத்தின.

சென்னை பெரியார் சிலைக்கு அருகில் இருந்து புறப்பட்ட இப்பேரணிக்கு திரு. கருணாநிதி தலைமை தாங்கினார்.

காந்தி காமராஜ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கிள்ளிவளவன், மதுரை ஆதீனம் ஸ்ரீ அருணகிரி, அண்ணா கழகத் தலைவர் திரு. அடியார், திரைப்பட நடிகரும் இயக்குநருமான திரு. ராஜேந்தர் உட்பட பலர் பேசினர்.

---

வீரகேசரி 15-4-84

# எம். ஜி. ஆர்., கருணாநிதி புத்தாண்டுச் செய்தி

சென்னை,

இந்தச் சித்திரை முதல் நாள் தொடங்கி நாம் போடும் புதுக் கணக்கு தமிழக மக்களுக்கு நல் வாழ்வையும், நற் செய்திகளையும் தருகின்றவையாக அமையட்டும் என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தனது புத்தாண்டு தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"இந்திய மக்களின் ஒட்டு மொத்த உணர்வின் பிரதிபலிப்பாக இந்தியப் பேரரசு மேற்கொண்ட நல்லெண்ண முயற்சிகளும், இலங்கைத் தமிழ்த் தலைவர்களின் ஒன்றுபட்ட ஆர்வங்களும் பயன் தராத நிலை நீடிப்பது நல்லதல்ல என இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து முதல்வர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கருணாநிதி

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தனது செய்தியில் கூறியிருப்பதாவது:—

"கொடுமைக்கு ஆளாகிற இலங்கைத் தமிழ் மக்களைப் பாதுகாக்க குரலெழுப்பும் நாளாக இதனைக் கருதுகிறோம்.

---

**Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)**

TO
MR. V. VASANTHAN
FLAT 5,
13, CLANRICARDE GARDENS
LONDON W-2 4JJ.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையை இந்தியா மிரட்ட முயல்வதாக ஜனாதிபதி குற்றச்சாட்டு

**'கூட்டணிக்கு ஆதரவளிப்பதை நிறுத்த வேண்டும்'**
**'இந்தியா டுடே' பத்திரிகைக்கு பேட்டி**

புதுடில்லி

இலங்கையை இந்தியா மிரட்டி வருவதாக ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையின் முக்கிய அரசியல் கட்சியான த.வி.கூட்டணிக்கு ஆதரவளிப்பதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் எச்சரித்தார்.

"இந்தியா டுடே" என்ற பிரபல இந்திய ஆங்கிலசஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தியாவையிட்டு இலங்கை பயப்படவில்லை. இலங்கையால் தன்னைத்தானே கவனித்துக் கொள்ள முடியும் என இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்குக்கும், கிழக்குக்கும் சுயாட்சி கோரும் த.வி.கூட்டணிக்கு முக்கிய ஆதரவளிப்பது இந்திய அரசுதான். இலங்கைத் தமிழர்கள் அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இலங்கையை இந்தியா மிரட்டி வருகிறதா?" என்று கேட்டபோது, "அதைத்தான் அவர்கள் செய்ய முயற்சிக்கிறார்கள்" என்று திரு. ஜயவர்தன பதிலளித்தார்.

இந்திய அரசு த.வி. கூட்டணியுடன் பேசுவதை நிறுத்தி இருந்தால் இலங்கையில் இந்திய ஆக்கிரமிப்பு என்ற பயத்தை அகற்றியிருக்க முடியும். எல்லா நேரமும் த.வி. கூட்டணித்தலைவர்கள் இந்தியாவுக்கு ஏன் ஓட வேண்டும்? இது எமது மக்களுக்கு கோபத்தை ஏற்படுத்துகிறது என்று அவர் மேலும் கூறினார்.

இந்தியா இலங்கைமீது ஆக்கிரமிப்பு நடத்தினால் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு அது முடிவாக இருக்கும் என அவர் எச்சரித்தார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை விடயங்கள் குறித்து இந்தியாவில் விடுக்கப்படும் குற்றச்சாட்டுகள் தமக்கு அதிருப்தியை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுடன் தொடர்பு ஏற்படுத்துவது பற்றி இலங்கை ஆலோசித்து வருவதாக இந்திய பத்திரிகைகள் கூறியுள்ளன. அவர்களின் சந்தேகங்களையும் கூச்சல்களையும் சலசலப்புகளையும் பற்றி எமக்கு அக்கறை இல்லை. இந்தியாவையிட்டு நான் பயப்படப்போவதில்லை. நான் யாரிடம் இருந்தும் உதவி கேட்கப் போவதில்லை. எங்களை நாங்களே கவனித்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் இனப் பூசலை ஒழிப்பதற்கு கூட்டப்பட்ட அரசியல் கட்சிகளின் வட்டமேசை மாநாடு இது வரை சிறிது பலனையே கண்டுள்ளது.

ஆயினும், த.வி. கூட்டணி பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

---

வீரகேசரி 16-04-84

## மதுரைமுத்து, நெடுமாறன் கைது

மதுரை.

மதுரை முன்னாள் மேயரும், தமிழக மேலவை உறுப்பினருமான திரு. எஸ். முத்து கடந்த சனிக்கிழமை பொலிசாரால் மீண்டும் கைது செய்யப்பட்டார். அதிகாரிகள் தமது கடமைகளைச் செய்வதற்கு இடைஞ்சலாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் மீதே கைதுசெய்யப்பட்டதாக கூறப்பட்டது.

முன்னதாக, வெள்ளிக்கிழமை பிற்பகலில் திரு. முத்து, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் உட்பட சுமார் 130 பேர் இலங்கை தமிழர்களைக் காப்பாற்ற மத்திய அரசு இராணுவத்தையனுப்ப வேண்டுமெனக் கோரி புகையிரத நிலையத்தில் பாண்டியன் எக்ஸ்பிரஸ் முன் மறியல் செய்ய முயன்றது தொடர்பாக பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

திரு. முத்து தனது வீட்டை விட்டு புறப்பட்டபோது கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டார். தன்னை விடுதலை செய்த பின்னர் திரு. நெடுமாறனையும் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி அவர் மறியலொன்றை மேற்கொண்ட போதே மீண்டும் கைது செய்யப்பட்டார்.

---

தமிழ் மக்களைக் காப்பாற்ற வீரகேசரி 12-4-84

# இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

**தலைவர் 'அமிர்' கோரிக்கை**

சென்னை, ஏப். 11

இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்க இந்திய அரசாங்கம் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கோரியுள்ளார்.

சர்வகட்சி மகாநாட்டினால் பலன் கிட்டாது போகலாம் என்பதால் இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில், இருந்து இராணுவத்தை வாபஸ் பெறுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கிலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் அதிர்ச்சியும், கவலையும் அளிப்பவையாக இருக்கின்றன என தெரிவித்த அவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு முழு நிதானம் தேவை எனவும் கூறினார்.

இதற்கிடையில் இலங்கைத் தமிழர் இனப்பிரச்சினை தொடர்பாக திரு. இராமச்சந்திரன் புதன்கிழமை கூட்டவிருந்த அனைத்துக் கட்சிகளின் மாநாடு எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அதற்கு முன்னதாக திங்கட்கிழமையன்று மாநில சட்டமன்ற அனைத்துக்கட்சிகளின் மாநாடு ஒன்றை முதல்வர் கூட்டியிருக்கிறார்.

Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சுன்னாகம் தீவைப்பு: வீரகேசரி 7-4-84

# 11 வர்த்தகர்கள் நஷ்டஈடு கோருகின்றனர்

### ரூபா 7 லட்சத்து 36 ஆயிரம் நஷ்டம்

யாழ்நகர்.

கடந்த மாதம் 20ஆம் திகதி சுன்னாகத்தில் இடம்பெற்ற தீ வைப்புச் சம்பவத்தில் பாதிப்புற்ற 11 வர்த்தகர்கள் தமக்குரிய நட்டஈட்டை வழங்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த 11 வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களுக்கு தீ வைக்கப்பட்டமையால் ஏற்பட்ட நட்டங்கள் பற்றி சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இவர்களுக்கு ஏற்பட்டுள்ள நட்ட மதிப்பீடு 7 இலட்சத்து 35 ஆயிரத்து 800 ரூபாவாம்.

## 'இந்தியா டுடே' விவகாரமும் இலங்கைத் தமிழர் பிரச்சினையும்: வீரகேசரி 16-04-84

# லோகசபையில் எம். பி. க்கள் விடுத்த கோரிக்கை

புதுடில்லி

தமிழ் நாட்டில் இலங்கை தமிழ் தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பு பற்றிய "இந்தியா டுடே" சஞ்சிகையின் கட்டுரை விவகாரம் லோகசபையில் இந்திரா காங்கிரஸ் எம்.பி. ஒருவரால் எழுப்பப்பட்டது.

இன்னொரு எம்.பியான திரு. சந்திரபால்சலானி அச் சஞ்சிகைப் பிரதியை சபையில் கிழித்தெறிந்தார்.

திரு. கே.கே. திவாரி எம்.பி. சஞ்சிகை பற்றிக்குறிப்பிட்டு அக் கட்டுரையில் தமிழ் நாட்டில் தமிழ் தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பளிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுவது தேசிய விரோத, தேசபக்தியற்ற செயல் எனக் கூறி அது பற்றி விவாதிக்க வேண்டும் எனக் கோரினர்.

ஒரு சிறப்பு விவாதத்தின் மூலம் இலங்கையில் "கடற்படை தடை" பற்றி விவாதிக்கப்படல் வேண்டும் எனவும், அரசு இது பற்றி அறிக்கை ஒன்று வெளியிட வேண்டும் எனவும் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

விஷயம் உண்மையிலேயே பாரதூரமானதெனக் கூறிய சபாநாயகர் திரு. பால்ராம்ஜக்தார் தகுந்த விதிகளின் கீழ் விவாதம் ஒன்றை அனுமதிப்பது குறித்துதான் பரிசிலிப்பதாகவும் இதற்கிடையில் அரசு அறிக்கை ஒன்றை வெளியிடலாம் எனவும் கூறினர்.

இலங்கையில் தொடரும் இனப்படுகொலை பற்றி அரசாங்கம் அலட்சியப்படுத்த முடியாது என ஜனதா எம்.பி. டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கூறினர்.

இந்திய கடல் பிரதேசத்துக்குள் இலங்கை கடற்படை கலங்கள் ஆக்கிரமித்து வந்ததாக இ.காங்கிரஸ் எம்.பி. திரு. இரா. அன்பரசு கூறினர்.

இலங்கையிலுள்ள சகல தமிழர்களும் "விடுதலை அடையும்" வரை இந்தியா காத்திருக்கக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தினர்.

இவ் விடயம் தொடர்பாக அரசு ஒரு அறிக்கை வெளியிடும் அல்லது இவ் விஷயத்தை நாம் கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றின் மூலம் விவாதிக்கலாம் என சபாநாயகர் இடது கம்யூனிஸ்ட் எம்.பி. திரு. சத்திய நாதன் சக்கர போர்த்திக்கு உறுதியளித்தார்.

MONDAY 16th APRIL — 1984

## இலங்கை அகதிகளுக்குப் புகலிடம்!

# தமிழக அரசுக்கு மத்திய அரசு அனுப்பிய கடிதம்

### தமிழக அமைச்சர் தகவல்

வீரகேசரி 16-4-84

சென்னை,

இலங்கை அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் புகலிடம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதன் மூலம் சகஜ நிலை திரும்பியதும் அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தமிழக அரசுக்கு டிசம்பர் 16இல் எழுதியுள்ளது.

இத் தகவலை வியாழக்கிழமை தமிழக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் சட்டசபையில் தெரிவித்தார்.

1983 ஜூலை 23 முதல் சென்ற ஜனவரி 31 வரை இலங்கையிலிருந்து 39,394 பேர் இந்தியா வந்துள்ளனர் எனவும் அவர்களில் 9,407 பேர் சிறிமா—சாஸ்திரி உடன்படிக்கைகுட்பட்டவர்கள் எனவும் அமைச்சர் கூறினர்.

www.tamilarangam.net



**ERIC SILVER reports from Jaffna on why the army will not ease Tamil fears** GUARDIAN 19-4-84.

# No way to tame tigers

THE MINISTER of National Security, Mr Lalith Athulathmudali, went to New Delhi last week to reassure Mrs Indira Gandhi that Sri Lanka was still seeking a political solution to its communal conflict. By all accounts he succeeded, but up here in the Tamil heartland his protestation rings distinctly hollow.

What is questioned is not so much the Government's sincerity as its will to negotiate a settlement acceptable to the bulk of the minority population, and the determination to make it stick.

The military deployment in the north has changed beyond recognition. The army is no longer playing soldiers. A company of hard looking infantrymen, armed with submachineguns and barricaded behind a wall of sandbags and old lorry tyres, guards Jaffna Airport. Others patrol the town in armoured personnel carriers, and control the Elephant Pass which links the Jaffna peninsula with the rest of the island.

Trains from Colombo no longer go as far as Jaffna. They stop at Kilinochchi, two hours busride away south of the pass. The railhead is heavily guarded by soldiers and sailors, and a detachment rides shotgun on the train all the way to and from the capital. The troops arrive at the station in a convoy led by an armoured personnel carrier with a machinegunner watching from the turret.

Yet this is far from a military solution either to the Tamil problem, or to the more limited one of terrorism. It is at best a short-term remedy. It will make it harder for the Tigers, in their various ideological splinters, to operate, just as the new maritime surveillance and ban on outboard motors will make it harder to bring in men and arms from south India.

The government will, however, still have to deal with the 900,000 Tamils who live in the north (plus another 900,000 elsewhere in the island). Outside the propaganda of Tamil exiles there is no evidence of a plot to drive them out or to kill them off.

Nor is there any sign that the new tough line is alienating public sympathy here from the terrorists, said to number as many as 6,000 under arms or training in Tamilnadu across the water. The Tigers are still getting shelter, from friends if not from their families. If anything, last week's military excesses, in which more than 50 Tamil civilians were killed by the army, increased their support.

The Tigers may bide their time, but they have not been tamed. Nonetheless, despite the shootings, curfews and harassment of the terrorists' families, the Tamil politicians have not withdrawn from the round-table talks initiated by President J. R. Jayewardene in January. They are looking over their shoulders at the militants, but they still hope for a lifeline from Colombo.

"If the government think their tactics will turn the Tamil public against the militant youth, they are barking up the wrong tree," the president of the Tamil United Liberation Front, Mr M. Sivasithamparam, argued this week. "The opposite is happening. More and more people are getting drawn to the militant youth, looking on them as heroes and saviours. I urge the government to withdraw the army from the Jaffna district as an interim measure and let the police do their normal duty of preserving law and order."

There is clearly no chance that the government will comply. Ministers have so little faith in the local Tamil policemen that they are not even issuing them with arms. Mr Athulathmudali, the President's new strong man, has staked too much on the troops to pull them out. They are here not only to cow the Tamils, but to convince the majority Sinhalese further south that the Government is taking care of things.

The Tamil leader confirmed, however, that the TULF would still take its seats when the round-table talks resume on May 9.

He was cautious in setting out the Tamils' demands, but anxious to keep the door open to compromise. "Our mandate from the Tamil voters in the 1977 elections was for the establishment of a separate Tamil state," he said, "but we have always stated that if the government and the Sinhalese parties offer an acceptable alternative, we shall place it before the people for acceptance or rejection."

When I asked what might constitute an acceptable alternative, he replied. "It may be federalism, it may be a great degree of regional autonomy. We would certainly take it to the people." He would not say in advance, however whether the TULF would recommend approval. What was not acceptable was the district councils, with little more power than the present village councils, which the government has offered. But President Jayewardene seems to have set his sights against any further concessions.

In an interview with the fortnightly magazine India Today the President said last week that he could not introduce the more powerful regional councils demanded by the Tamils because the Sinhalese were against them

"The TULF says I can solve this," Mr Jayewardene argued, "but I can't. I'm stuck. I'm a prisoner, not of any particular group but a prisoner of circumstances, law, the constitution and the political parties. I can't throw my weight about and say: do this, do that. I'm not a dictator."

That may be correct and commendable, but it is hardly the stuff of statesmanship — or the answer to Jaffna's recurring cycle of violence and repression.

***Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ கட்டுப்பாடற்ற நிலைமை உருவாவதை தடுக்கவும்!

# இனப்பிரச்சினைக்கு அவசரத்தீர்வு காணுங்கள்

## ஜனாதிபதியிடம் இந்திரா கோரிக்கை

புதுடில்லி ஏப். 7

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இணக்கமான அரசியல் தீர்வே அவசரத்தேவை என்பதைப் பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனாவிடம் வலியுறுத்தியுள்ளார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் நேற்று லோகசபையில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கையில் மீண்டும் இனக் கலவரம் தலை தூக்கினால் கட்டுப்பாடற்ற நிலையே உருவாகும். அதனால் இந்தியாவில் தாக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் திருமதி இந்திரா காந்தி இலங்கை ஜனாதிபதியிடம் அறிவுறுத்தி இருப்பதாயும் திரு. ராவ் சொன்னார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கருத்துவேறுபாடுகளை அகற்றும் நோக்கத்துடன் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன தனது சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை அனுப்பி வைக்க இணக்கம்தெரிவித்திருக்கின்றார் என்ற தகவலையும் திரு. ராவ் சபையில் தெரிவித்தார்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தை இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கான இலங்கை அரசின் முயற்சி எனச் சொல்லப்படுவது குறித்தும், யாழ்ப்பாணத்திலும் ஒரு சில பகுதிகளிலும் இந்திய வம்சாவளியினர் வன்முறைக்கு இலக்காகி கொலையுண்டமை குறித்தும் லோகசபையில் இடம் பெற்ற சிறப்பு விவாதத்தினை முடித்து வைத்து அமைச்சர் உரையாற்றினார்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியான வட்டமேசை மாநாட்டைத் தொடர்ந்து கூட்டி அதன் மூலம் தீர்வுக்கான பேச்சுக்களைத் தொடர ஜனாதிபதி திரு. ஜயவர்தன இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் திரு. ராவ் தனது உரையில் குறிப்பிட்டார்.

### ஐ. நா. படை

இலங்கைத் தமிழர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக, சமாதானப் படையொன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு ஐ. நா. வைக் கோர வேண்டும் என்று லோக சபையில் பேசிய உறுப்பினர்கள் பலரும் அரசாங்கத்தை வலியுறுத்தினர்.

---

## India denies Lanka charge

COLOMBO, March 21 (PTI) — India has denied as "baseless" a well publicised report here today claiming to confirm a charge that Tamil Nadu is running training camps for Sri Lankan-Tamil terrorists.

In a comment, India's High Commissioner S. J. S. Chhatwal said "the whole report has no basis whatsoever. There are no camps either by the Government of India or by the Tamil Nadu Government or aided by them anywhere in India."

---

## யாழ்ப்பாணத்தில் கடும் பதட்ட நிலை

கொழும்பு, மார்ச். 29—இரு சிங்களவர்கள் கொல்லப்பட்டதை யடுத்து யாழ்ப்பாணம் நகரத்திலும், அதன் அக்கம் பக்க பகுதிகளிலும் வியாழக்கிழமையன்று கடும் பதட்ட நிலைமை தோன்றியது.

கொல்லப்பட்டவர்கள் ஒரு எக்சைஸ் துறை அதிகாரியும், அவரது டிரைவருமாவர் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அடையாளம் தெரியாதசிலர் அவர்களைச் சுட்டுக் கொன்றனர். அவர்கள் தங்கள் காலைச் சிற்றுண்டியை ஒரு ஓட்டலில் முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது இச்சம்பவம் நடந்தது.

அதிகாரி ஸ்தலத்திலேயே மாண்டார். டிரைவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பிறகு உயிரிழந்தார்.

இச் செய்தி பரவியதும் யாழ்பாணம் நகரிலும், அதன் புறநகர்களிலும் சாலைப் போக்குவரத்து அறவே நின்றதுடன், மக்களும் வெளியே நடமாடாமல் வீடுகளுக்குள்ளேயே தங்கி விட்டனர். கடைகள், பள்ளிக்கூடங்கள் உடனடியாக மூடப்பட்டன. எங்கும் வெறிச்சோடிக் கிடந்தது.

புதன்கிழமை எட்டு தமிழர்கள் விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையொட்டி ஏற்கனவே இந்நகரில் பதட்ட நிலைமை நிலவுகிறது.

---

***Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாராளுமன்றத்தில் தகவல்:

# 100 தமிழர்கள் கொலை! திடுக்கிடும் தகவல்!!

## இலங்கையில் சிங்கள ராணுவம் வெறியாட்டம் மேல் விவரம்!!

புதுடெல்லி, மார்ச், 30 — இலங்கையில் மீண்டும் பயங்கர கலவரம் ஏற்பட்டு உள்ளது. தமிழர் பகுதியில் சிங்கள ராணுவத்தினர் சரமாரியாக சுட்டார்கள். இதில் 100பேர் வரை கொல்லப்பட்டனா என்று பாராளுமன்றத்தில் இ.காங்கிரஸ் உறுப்பினா அன்பரசு கூறினார். இந்த படுகொலை சம்பவம் பற்றி மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்து உள்ளன.

இலங்கையில் கடந்த ஜூலை மாதம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் அல்லவா? ஆயிரக்கணக்கான தமிழாகள் சிங்கள ராணுவத்தால் சுட்டு கொல்லப்பட்டனர்.

### மீண்டும் கலவரம்

இந்த பயங்கர கலவரத்தின் வேதனை மாநாடு நினைவின் பீதி தமிழ் மக்களிடம் இருந்து நீங்கும் முன்பே மீண்டும் கலவரம் ஏற்பட்டு உள்ளது. தமிழர் பிரச்சினையை தீர்க்க பிரதமர் இந்திரா எடுத்த முயற்சிகள் அனைத்தும் விணாகி விட்டன. வட்டமேஜை மாநாடு நிலையிலேயே ஒத்திவைக்கப்பட்டது. தமிழர்களை பூண்டோடு ஒழித்துக்கட்ட தனி மந்திரி நியமிக்கப்பட்டார். தமிழர் பகுதியில் ராணுவம் குவிக்கப்பட்டது

### வெறியாட்டம்

சிங்கள வெறியரான புதிய மந்திரி தமிழர் பகுதியில் சுற்றுப்பயணம் செய்ததை தொடர்ந்து தமிழர் மீது ராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டது. நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் அருகே உள்ள சுன்னாகம் என்ற இடத்தில் தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் கண்மூடித்தனமாக சுட்டது. இதில் 30க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### திடுக்கிடும் தகவல்

இந்தசம்பவத்தில்மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துஉள்ளன.

சுன்னாகத்தில் வாரந்தோறும் புதன்கிழமைகூடும் சந்தையில் இந்த படுகொலை நிகழ்ந்து உள்ளது. சந்தை கூட்டம் 'ஜேஜே' என்று இருந்தபோது ராணுவத்தினர் 2 'ஜீப்'களிலும் ஒரு லாரியிலும் அங்கு வந்தார்கள். கூட்டத்தை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார்கள்.

### பலி குழந்தைகள் பலி

பக்கத்தில் ஒரு மைதானத்தில் பள்ளிக்கூட மாணவிகள் பள்ளிக்கு ... நின்றனர் ... பள்ளி மாணவிகள் கூட விடவில்லை: அவர்கள் மீதும் சுட்டார்கள். இதில் சில குழந்தைகள் பலியாயின. பலர் காயம் அடைந்தனர்.

### 100 பேர் சாவு

சாவு எண்ணிக்கை மொத்தம் 100க்கு மேல் இருக்கும் என்று பாராளுமன்றத்தில் இ.காங்கிரஸ உறுப்பினர் அன்பரசு நேற்று பேசும்போது கூறினார். இந்த பிரச்சினையை எழுப்பி அவர்பேசும்போது எனக்கு லண்டனில்இருந்து கிடைத்த தகவல்படி 100 பேருக்கு மேல் பலியாகி இருக்கிறார்கள் என்று கூறினார்.

**Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற இந்தியஅரசே! படைஅனுப்பு!

## பிரதமர் இந்திராவுக்கு தளபதி வீரமணி தந்தி!

சென்னை, மார்ச் 29— ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்த உடனே தலையிடுக என்று இந்திரா காந்திக்கு திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தளபதி கி. வீரமணி தந்தி அடித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்படுவது அறிந்து தாய்த் தமிழகத்தார் கொந்தளித்துப் போயுள்ளனர் என்றும், இலங்கையில் மீண்டும் ஓர் இனப் படுகொலை நடக்கும் என தாம் அஞ்சுவதாகவும் தம் தந்தியில் கூறியுள்ள தளபதி கி.வீரமணி ''இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற— அந்தத் தீவுக்கு இந்தியஇராணுவத்தை அனுப்பிட வேண்டும்; அன்றேல் தாய்த் தமிழகத்தார் தமது ஈழத் தமிழர் ஆதரவுக் கிளர்ச்சியை மீண்டும் தொடங்கும்படி கட்டாயபபடுத்தப்படுவர்!'' என்றும் எச்சரித்துள்ளார்.

தந்தியின் நகல்கள் மத்திய வெளிவிவகாரத்துறை, பாதுகாப்புத் துறைஅமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## மக்களவையில் தமிழகஉறுப்பினர்கள் கோரிக்கை!

புதுடெல்லி, மார்ச் 29-

**இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் நடுவண் அரசு காட்டும் அலட்சியத்தைக் கண்டித்து இன்று மக்களவையில் கழக உறுப்பினர் வெளிநடந்தனர். இ. காங்கிரஸ் உறுப்பினர் இரா. அன்பரசு தமிழர்களைக் காப்பாற்ற இந்தியா படைகளை அனுப்ப வேண்டுமென்று வலியுறுத்தினர்.**

### வெளி நடப்பு!

இன்று மக்களவையில் கேள்வி நேரம் முடிந்ததும் கழக உறுப்பினர்கள் டாக்டர் வெ. குழந்தைவேலு, கோவை இரா. மோகன் ஆகியோர் ஈழத் தமிழர்கள் படுகொலை பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானத்தைஎடுத்துக்கொள்ள வேண்டும் என்றனர்.

இ. காங்கிரஸ் உறுப்பினர் இரா. அன்பரசு, ஜனதா உறுப்பினர் பாபு சாகேப் பருலேகர் ஆகியோரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார்கள்.

கழக உறுப்பினர்கள், இலங்கை நிலைமை பற்றி வெளி விவகாரத் துறை அமைச்சர் அறிக்கை தர வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

கவன ஈர்ப்புத் தீர்மானங்களை அவைத்துணைத் தலைவர் அனுமதிக்காததால்— கழக உறுப்பினர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வெளிநடந்தனர்.

இ. காங்கிரஸ் உறுப்பினர் இரா. அன்பரசு, சிங்கள இராணுவத்தினரால் ஈழத் தமிழர்கள் பத்துப் பேர்தான் கொல்லப்பட்டிருப்பதாகசெய்தித்தாள்களில் வந்துள்ள தகவல்கள் தவறு என்றும், நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக தமக்கு இலண்டனிலிருந்து தொலைபேசித் தகவல் வந்துள்ளது என்றும் கூறினார்.

''இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற இலங்கைக்கு இந்திய அரசாங்கம் உடனடியாக விமானப் படையையும் கடற்படையையும் அனுப்ப வேண்டும்!'' என்றும் அன்பரசு கூறினார்.

*Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



30 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதால்

# இலங்கையில் கொந்தளிப்பு!

தினத்தந்தி 30-3-84

## 2 சிங்களர்கள் சுட்டுக் கொலை!

கொழும்பு, மார்ச். 30— இலங்கையில், 30 தமிழர்களை சிங்கள ராணுவம் சுட்டுக் கொன்றதால், கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டு உள்ளது.

யாழ்ப்பாணத்தில், 2 சிங்களர்கள் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### வெறியாட்டம்

இலங்கையில், யாழ்ப்பாணம் அருகில் உள்ள மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் என்ற இடங்களில், தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் நேற்று முன்தினம் [illegible] தனமாக சுட்டது.

சந்தைக்கு போய் வீட்டு திரும்பிக் கொண்டிருந்தவர்களை, காக்காய் - குருவிகளை சுடுவது போல ராணுவத்தினர் சுட்டுக் கொன்றார்கள்.

### எத்தனை பேர்?

இந்த துப்பாக்கி சூட்டில் குறைந்தது 10 பேர் செத்ததாகவும், 25 பேர் காயம் அடைந்ததாகவும் இலங்கை அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்து உள்ளது.

என்றாலும், சாவு எண்ணிக்கை 30 என்று இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கும், லண்டனுக்கும் கிடைத்துள்ள தகவல்கள் கூறுகின்றன.

துப்பாக்கி சூட்டிற்கு பலியானவர்களில், பெண்கள், பள்ளிக்கூட குழந்தைகள் ஆகியோரும் உள்ளனர்.

### கொந்தளிப்பு

இந்த சம்பவத்தை தொடர்ந்து, இலங்கை முழுவதும் கொந்தளிப்பான நிலைமை நிலவுகிறது.

யாழ்ப்பாணத்தில், ரோடுகளில் ராணுவம் ரோந்து சுற்றுகிறது. பஸ்கள் ஓடவில்லை. கடைகள் அடைக்கப்பட்டு உள்ளன.

பொதுமக்கள், "என்ன நடக்குமோ" என்ற அச்சத்துடன் கதவுகளை தாழிட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள்.

### சிங்களர் சுட்டுக்கொலை

தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக, யாழ்ப்பாணத்தில் நேற்று 2 சிங்களர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இவர்களில் ஒருவர், உற்பத்தி வரி இலாகா அதிகாரி பெயர் சோமபாலா, வயது 47. மற்றொருவர் அவருடைய கார் டிரைவர் சிரில் (வயது 35).

இவர்கள் ஒரு ஓட்டலுக்கு சென்று சாப்பிட்டு விட்டு திரும்புகிற வழியில், அடையாளம் தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

### ராணுவத்துக்கு முழு சுதந்திரம்

இலங்கை தமிழர் பிரச்சினையை தீர்க்க ஒருபுறம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டு, மறுபுறம் தமிழர்களை நசுக்குவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம் பகுதிக்கு 5 ஆயிரம் ராணுவத்தினர் அனுப்பப்பட்டு உள்ளனர். தமிழர்களை "வேட்டையாட" அவர்களுக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்பட்டு உள்ளது.

இந்த ராணுவத்தினரின் ஒரு பகுதியினர் தான், சந்தையில் தமிழர்களை சுட்டுத் தள்ளியவர்கள்.

### உயிர் ஊசலாடுகிறது

ராணுவத்தினர் சுட்டதால் படுகாயம் அடைந்த 50க்கு மேற்பட்ட தமிழர்கள், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

அவர்களில் பலருடைய உயிர் ஊசலாடுகிறது.

### வெளிநாட்டு தலைவர்கள்

இலங்கை தலைநகரான கொழும்பு நகரில், ஆசிய நாடுகளின் சுற்றுலா வளர்ச்சி மாநாடு வருகிற திங்கட்கிழமை தொடங்குவதாக இருக்கிறது.

50க்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து, 1,200 தலைவர்கள் இந்த மாநாட்டுக்கு வர இருக்கிறார்கள்.

இலங்கையில் தற்போது இருந்து வரும் பதட்ட நிலையில் இந்த மாநாடு நடைபெறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

### புது மந்திரி

இலங்கை தமிழர்களை ஒடுக்குவதற்காகவும், தமிழர் வாழும் பகுதிகளில் ராணுவத்தை ஏவி அட்டூழியம் புரிவதற்காகவும், "தேசிய பாதுகாப்பு மந்திரி"யாக லலித் அதுலத் முதலி நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

அவர் பொறுப்பு ஏற்ற ஒரு சில நாட்களிலேயே, தமிழர்கள் சுட்டுத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

### இந்தியா மீது பாய்ச்சல்

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து இந்தியா வருத்தம் தெரிவித்தது. இலங்கைக்கு ஆத்திரம் அளித்துள்ளது.

"சில நாட்களுக்கு முன் சிங்கள போலீசார் சுட்டுக் கொல்லப்பட்டார்களே, அதற்கு ஏன் வருத்தம் தெரிவிக்கவில்லை" என்று இலங்கை வெளிநாட்டு இலாகா அதிகாரி கேட்டதாக, இலங்கை ரேடியோ கூறியது.

# இந்திரா காந்திக்கு வீரமணி தந்தி!

## "இலங்கைக்கு ராணுவத்தை அனுப்புங்கள் !"

சென்னை, மார்ச். 30— "தமிழர்களைக் காப்பாற்ற இலங்கைக்கு ராணுவத்தை அனுப்புங்கள்" என்று பிரதமர் இந்திரா காந்திக்கு திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீரமணி தந்தி கொடுத்து இருக்கிறார்.

இலங்கை யாழ்ப்பாணத்தில் விமானப்படை வீரர்கள் துப்பாக்கியால் சுட்டு ஏதும் அறியாத தமிழ்ப் பெண்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டனர்.

### வீரமணி தந்தி

இதைத் தொடர்ந்து திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி பிரதமர் இந்திரா காந்திக்கு தந்தி கொடுத்து இருக்கிறார்.

அதில் அவர் கூறி இருப்பதாவது:—

"இலங்கை அரசால் தமிழர்கள் வேட்டையாடப்படுவது குறித்து தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் கொதிப்படைந்து இருக்கிறார்கள்.

மீண்டும் திட்டமிடப்பட்ட இனப்படுகொலை தொடங்கப்பட்டு உள்ளது.

### ராணுவத்தை அனுப்புக

கிரெனடாவில் நடந்ததைப் போல, தமிழர்களைக் காப்பாற்ற இந்தியப் படைகளை விரைந்து அனுப்ப வேண்டும்.

இல்லையேல் இதற்கு முன் எப்போதும் தமிழ்நாடு கண்டிராத அளவுக்கு மக்கள்போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டு விடுவோம்."

இவ்வாறு தந்தியில் கூறப்பட்டு உள்ளது.

இதேபோல வெளிநாட்டு மந்திரி நரசிம்மராவ், ராணுவ மந்திரி வெங்கடராமனுக்கும் தந்தி கொடுக்கப்பட்டு உள்ளது.

**Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்னை ● ருத்ரோத்காரி ஞு பங்குனி மீ 18உ ● சனிக்கிழமை (31-3-1984) ● ஹிஜ்ரி 1404ஞு ஜ'ஆகிர் 27உ

# இலங்கைத் தமிழர் பிரச்னையில் பிரதமர் தலையிட எம்.ஜி.ஆர். கோரிக்கை

சென்னை, மார்ச் 30—இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்தியப் பிரதமர் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று கோரி தமிழக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் பிரதமர் இந்திரா காந்திக்கு அவசர செய்தி (டெலக்ஸ்) வியாழனன்று அனுப்பியுள்ளார்.

சட்டப்பேரவையில், இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவது தொடர்பாக பல்வேறு எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த ஒத்திவைப்பு பிரேரணைகளுக்கு அரசு தரப்பில் விளக்கம் அளித்து அவை முன்னவர் நெடுஞ்செழியன் பேசும்போது, முதலமைச்சர் பிரதமருக்கு அனுப்பிய அவசர செய்தி பற்றிக் குறிப்பிட்டார். இலங்கையில் தமிழர்கள் ''படுகொலை'' செய்யப்பட்ட செய்தியை அறிந்தவுடன் சென்னை ...ட்டக் கல்லூரி மாணவர்கள் வியாழனன்று அதிகாலை சென்னையில் உள்ள இலங்கைத் தூதர் அலுவலகத்திற்குச் சென்று, அந்த அலுவலகத்தை முற்றுகையிட முயற்சி செய்தார்கள். போலீசார் தக்க தருணத்தில் தலையிட்டு, பெரிய அசம்பாவித நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறாதபடி பார்த்துக்கொண்டார்கள் என்றும் அவசரச் செய்தியில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். சென்னையில் உள்ள இலங்கைத் தூதர் அலுவலகத்திற்கும் தக்க போலீஸ் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற செய்தி வந்தவுடன் தமிழக மக்கள் கொதிப்படைந்துள்ளார்கள். தமிழக மக்களிடையே பலத்த எதிர் விளைவுகளை இச்செய்தி ஏற்படுத்தியுள்ளது என்றும் தமது அவசர செய்தியில் முதலமைச்சர் பிரதமருக்குத் தெரிவித்துள்ளார் என்றும் சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், கடந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இலங்கையில் இனப் படுகொலை நடைபெற்றபோது, தமிழக மக்கள் ஒருமித்து இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வளிக்க குரல் எழுப்பியதையும், தமிழக சட்டப்பேரவையும் மேலவையும் இதில் மத்திய அரசு தலையிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததையும் நினைவுபடுத்தினார். இதன்பேரில் பிரதம மந்திரி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும், வட்ட மேஜை மகாநாடு நடத்த வேண்டிய சூழ்நிலை உருவானதையும் அவர் எடுத்துக் கூறினார். இந்த நிலையில், இலங்கை ராணுவத்தினர் தமிழர்களுக்கு எதிராக வெறிச்செயலில் ஈடுபட்டிருக்கும் செய்தி பேரதிர்ச்சியையும், துயரத்தையும் தமிழக மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார்.

சிங்கள ராணுவத்தினர் சுட்டதில் 10 தமிழர் இறந்தார்கள் என்று அதிகாரபூர்வமாக இலங்கை அரசு அறிவித்திருந்தாலும் 30 பேர்களுக்கு மேல் இறந்துள்ளனர்; நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்; இவர்களில் பலர் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர் என்று தகவல் வந்துள்ளது என்றும் நெடுஞ்செழியன் கூறினார். தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள ராணுவத்தினர் வெறித்தன்மையோடு சுற்றி வருகிறார்கள் என்றும், 40 பேர்களை அவர்கள் விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்றும் செய்தி கூறுகிறது. இந்தக் கலவரம் காரணமாக விமானப் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## அவசியமாயின் டில்லி போகலாம்

இந்திய நாடாளுமன்றத்திலும் ராஜ்யசபையிலும் இந்தப்பிரச்னை நேற்று விவாதிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கும்படி இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூறிய நிதி அமைச்சர், சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதற்ிணங்க முதலமைச்சர் இந்தப் பிரச்னையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார் என்றும், நிலைமையையொட்டி சர்வகட்சிக் கூட்டம் கூட்டி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளை மேற்கொள்வார் என்றும் தெரிவித்தார். இதற்காக ஒரு தூதுக்குழு டில்லி சென்று பிரதமரிடம் எடுத்துச் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் சர்வகட்சித் தலைவர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இலங்கைத் தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர் அமிர்தலிங்கத்தை இன்று காலை முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் சந்தித்து, இலங்கை நிலைமை பற்றி அரை மணி நேரம் பேசினார். தற்போது சென்னை வந்துள்ள ஜி. பார்த்தசாரதியையும் முதலமைச்சர் சந்தித்து இலங்கையில் தமிழ் மக்கள் படும் அவதியைப் பிரதமருக்கு எடுத்துச் சொல்லும்படி கூறியிருக்கிறார். அவர் வெள்ளியன்று மாலை டில்லிக்குத் திரும்பிச் சென்று தமிழக அரசின் உணர்வையும் கருத்துக்களையும் பிரதமருக்குத் தெரிவித்து ஆவன செய்வதாக முதல்வரிடம் தெரிவித்துள்ளார் என்றும் நெடுஞ்செழியன் சொன்னார்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் மத்திய அரசும் மாநில அரசும் முறையான நடவடிக்கை எடுக்கும். ஆகவே, அமைதியாக இருக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளையும் பொது மக்களையும் கேட்டுக் கொள்வதாக நெடுஞ்செழியன் கூறினார். இலங்கைத் தமிழர் உயிர் உடைமைகளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். வட்டமேஜை மாநாட்டைக் கூட்டி சுமுகத் தீர்வு காண வேண்டும். அதற்காக இந்திய அரசு எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தபடி நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் நெடுஞ்செழியன் கூறினார்.

## லோகசபையில் அறிக்கை

தினமணி 4-4-84

# இலங்கை [illegible] தூதருக்கு இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி, ஏப். 3—இலங்கை அரசில் உள்ள பொறுப்பு வாய்ந்த சிலர் இந்தியா பற்றி ஆதாரமில்லாத புகார்களைக் கூறுவதற்கு வெளி நாட்டிலாகா துணை அமைச்சர் ஏ. ஏ. ரகீம் ஆட்சேபம் தெரிவித்தார். இவை ''நம் இரண்டு நாடுகளிடையே நீண்ட காலமாக உள்ள உறவுக்கு பாதகமாக அமைந்துவிடும்'' என்று கூறினார்.

இலங்கையில் உள்ள நிலைமை பற்றி செவ்வாய்க்கிழமையன்று லோக சபையில் ஒரு அறிக்கையை வெளியிட்டார். ''இந்தியப் பிரதேசத்தில் ரகசியமாக ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்படவுமில்லை, பயிற்சி முகாம்களும் இல்லை'' என்று ரகீம் கூறினார்.

''இலங்கையின்பால் நமக்கு நல்லெண்ணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. அண்மையில் சில நாட்களாக நமக்கு எதிராகப் பிரசாரம் நடத்தும்படியாக நாம் எதையும் செய்துவிடவில்லை'' என்று அவர் கூறினார்.

இலங்கையில் சிக்கலான, உணர்ச்சியைத் தூண்டி விடக்கூடிய இனப் பிரச்னையை, புத்தி பூர்வமான, ஆக்கப் பூர்வமான முறையில் கவனிப்பதற்கு இந்தியாவுக்கு எதிரான பிரசாரம் துணை புரியாது என்று ரகீம் சொன்னார்.

## மீண்டும் பதட்ட நிலைமை

இலங்கையில் நிலைமை மீண்டும் பதட்டமாகிவிட்டது என்றுகூறிய ரகீம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடந்துள்ள வன்முறைச் சம்பவங்கள், இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் ஆழ்ந்த கவலையையும், வேதனையையும் உண்டுபண்ணியுள்ளது என்று சொன்னார். அங்கு வேண்டுமென்றே நடத்தப்படும் படுகொலைகள் பற்றி இந்தியா முழுவதிலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள உணர்வுகளை சபையின் உறுப்பினர்கள் வெளிப்படுத்தி விட்டனர் என்று அமைச்சர் சொன்னார்.

இலங்கையில் இனப் பிரச்னைக்கு நிலையான அரசியல் தீர்வு காண்பதில் போதுமான முன்னேற்றம் இல்லாததானது நிலைமையை மேலும் மோசமாக்கி விட்டது என்று சொன்னார்.

எல்லா அரசியல் கட்சிகள், சமய, சமூக கோஷ்டிகளிடையே நடந்துகொண்டிருந்த பேச்சுக்களில் இப்போது ஏற்பட்டுள்ள தேக்க நிலைமை, மே 9ந் தேதியன்று மீண்டும் பேச்சு தொடங்கும்போது நீங்கிவிடும் என்று ரகீம் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கைக்கு இந்தியா அச்சுறுத்தலாக இருக்காது என்று கூறி, அந்த நாட்டின் ஒற்றுமையை ஆதரிப்பதாகவும், பிரிவினையையும் எல்லாவிதமான வன்முறைகளையும் கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் சொன்னார்.

ஒரு அரசியல் தீர்வு காண்பதற்காக இலங்கைக்கு இந்தியாவின் உதவியை பிரதம மந்திரி இந்திரா காந்தி கிடைக்கச் செய்திருப்பதாக ரகீம் நினைவுபடுத்தினார்.

இப்போதைய நெருக்கடி நிலைமையில், இலங்கையில் அனைவருக்கும் ஏற்புடையதான ஒரு அரசியல் தீர்வைக் காண்பது மிகவும் அவசியம் என்று சொன்னார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாடற்ற பிரஜைகளுக்கு இலங்கை குடியுரிமை தர வட்டமேஜை மாநாடு சிபாரிசு

தினமணி 17-3-84

கொழும்பு, மார்ச் 16—இலங்கையில் உள்ள இந்திய வமிசா வழியைச் சேர்ந்த "நாடற்ற" பிரஜைகள் 93 ஆயிரம் பேருக்கு இலங்கைக் குடியுரிமையை வழங்கலாம் என்று கொழும்பில் நடைபெறும் வட்ட மேஜை மகாநாடு சிபாரிசு செய்திருக்கிறது.

இவ்வாறு பிரஜா உரிமை அளிக்கலாம் என்று அந்த மாநாட்டில் பொதுக் கருத்து உருவானதாக மாநாட்டுப் பிரதிநிதியும், இலங்கை வர்த்தகத் துறை அமைச்சருமான லலித் அதுலத் முதலி நிருபர்களிடம் கூறினார். இது இலங்கையின் பாதுகாப்பை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றோர் நடவடிக்கையாகும் என்று அவர் சொன்னார்.

அவ்வாறு குடியுரிமை வழங்கப்படாவிடில் அவர்கள் அதனை ஒரு "சாக்காக" வைத்து, இலங்கையில் தலையிடுமாறு இந்தியாவை அழைக்கக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுவதைக் கருதியே அவர் அவ்வாறு "பாதுகாப்பு நடவடிக்கை" என்று குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

இலங்கையில் இனப் பிரச்னைக்கான தீர்வின் ஒரு பகுதியாக தமிழர்கள் வாழும் பகுதிக்கு "சுயாட்சி" அதிகாரம் வழங்க வேண்டும் என்னும் கோரிக்கை பற்றி "பொதுக் கருத்து" உருவாவதற்கு இந்த மாநாட்டில் போதுமான இணக்கம் ஏற்படவில்லை.

அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு உடன்பாடு ஏற்பட்ட போதிலும் அதை மாவட்ட மட்டத்தில் பகிர்ந்து வழங்குவதா, பிராந்திய மட்டத்தில் பகிர்ந்து தருவதா என்பது குறித்துக் கருத்து வேறுபாடு நிலவியது.

பிராந்திய மட்டத்தில் சுயாட்சி உரிமை வழங்குவதற்கு புத்த பிட்சுக்களும், ஆளும் ஐக்ய முன்னணி தரப்பினரும் ஒப்பவில்லை; தற்போதுள்ள மாவட்ட வளர்ச்சிக் கவுன்சில்களுக்கு அதிக அதிகாரம் தருவதற்கு வேண்டுமானால் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

பிராந்திய மட்டத்தில் அதிக அதிகாரம் தரப்பட வேண்டும் என்பது இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவுடன் பிரதம மந்திரி இந்திரா காந்தியின் விசேஷ தூதர் ஜி. பார்த்தசாரதி நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது வலியுறுத்தப்பட்ட அம்சங்களில் முக்கியமானதாகும்.

வட்ட மேஜை மாநாட்டில் இதுவரை "பொதுக் கருத்து" ஏற்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும், இன்னமும் தீர்க்கப்படாத பிரச்னைகள் பற்றியும் இம்மாநாட்டின் ஒட்டு மொத்தக் கூட்டம் மார்ச் 20ந் தேதி நடத்தும்போது மீண்டும் பரிசீலிக்கப்படும் என்றும், அதுலத்முதலி சொன்னார். தற்போது இரு தினங்களாக கமிட்டிகள் மட்டத்தில்தான் இந்த மாநாடு பல விஷயங்களைப் பரிசீலித்து வருகிறது.

வகுப்பு மோதல்கள் பற்றிய காரணம் குறித்தும், இந்த மாநாட்டில் பொதுக் கருத்து காணப்பட்டது என்றும், எல்லா வகையான தீவிரவாத நடவடிக்கைகளும் ஒடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது என்றும் அதுலத் முதலி கூறினார்.

## இலங்கை மந்திரிகளின் பேச்சுக்கு ஆட்சேபம்

"தமிழீழம்" என்னும் தனி நாடு ஏற்படுத்துவதற்காக இலங்கை தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி தரப்படுகிறது என்றும், இலங்கை மீது இந்தியா படையெடுக்கப் போகிறது என்றும் இலங்கை மந்திரிகள் சிலர் பொறுப்பற்ற முறையில் பேசுவதை நிறுத்த வேண்டும் என்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கூறியிருக்கிறது.

இலங்கை அரசின் கொள்கைகளினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே அவர்கள் இவ்வாறு கூறுவதாக அக் கட்சியின் "பார்வார்டு" என்னும் பத்திரிகை எழுதி இருக்கிறது. இந்தியாவைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறுவது அந்த நாட்டுடனான நல்லுறவை பாதிக்கும் என்று அது குறிப்பிட்டுள்ளது.

# இலங்கை தோட்டங்களில் வேலை நிறுத்தம்

தினமணி 4-4-84 1/2

கொழும்பு, ஏப். 3—ஊதியம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையும் மற்ற கோரிக்கைகளையும் ஆதரித்து தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டங்களில் வேலை பார்க்கும் 5 லட்சம் தொழிலாளர்கள் திங்கட்கிழமையன்று வேலைநிறுத்தம் செய்தனர்.

இது நெருக்கடியான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. இது பற்றி அரசு அவசரமாகப் பரிசீலித்தது. நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்காக அரசியல் நோக்கத்துடன் இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளயாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தேயிலையும் ரப்பரும்தான் இலங்கைக்கு கணிசமான அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. தோட்டங்களில் சிலநாட்கள் பணி முடங்கினால் அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# 'கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை தொடர்ந்து வேலை நிறுத்தம்'

8-4-84 வீரகேசரி

## லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவர் டாக்டர் கொல்வின் அறிவிப்பு

[எம். ஏ. எம். நிலாம்]

இந்த நாட்டு தோட்டத் தொழிலாளர்களின் நீதியான கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாறு லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது—

இன்று நடைபெற்று வரும் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டம் இலங்கைச்சரித்திரத்திலேயே மிகப் பெரிய போராட்டமாகும். ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டின் சகல பகுதிகளிலும் கிராமப்புறத் தொழிலாளர்களுடன் தோட்டங்களில் குடியிருக்கும் தொழிலாளர்களும் இணைந்து போராடி வருகின்றனர்.

இது தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரப் பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்று வரும் போராட்டமாகும். வேலை நிறுத்தம் செய்யக் காரணமான கோரிக்கைகள் நீதியான அடிப்படையில் உருவானதாகும். இந்த அரசு பதவிக்கு வந்தது முதல் நான்கு தடவைகள் அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கியது. எல்லோரும் ஏற்றுக்கொண்டபடி உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யுமுகமாக வழங்கப்பட்டதே இச் சம்பள உயர்வாகும்.

இவ்வாறு வழங்கப்பட்ட சம்பள உயர்வின் மொத்தத் தொகை 361 ரூபாவாகும். எனினும் இதில் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைத்தது முப்பத்தி ஆறு ரூபா மட்டுமே. சுருங்கக் கூறின் அவர்கட்கு இது வரை 325 ரூபா சம்பள உயர்வு மறுக்கப்பட்டு வருகின்றது.

வேலை நிறுத்தப் போராட்டத்தின் குறிக்கோள் மறுக்கப்பட்ட சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்வதே ஆகும்.

நாம் கேட்பது புதிய சம்பள உயர்வு அல்ல. அரசாங்கத்தின் சம்பள உயர்வுக் கொள்கையைப் பாகுபாடின்றி தோட்டத் தொழிலாளர்களுக்கும் சமமாக அமுல் நடத்த வேண்டும் என்பதே ஆகும்.

# Lanka under pressure over plantation stir

The Hindustan Times 4/4/84

COLOMBO, April 3 (PTI)—The Sri Lanka Government came under pressure to negotiate with tea and rubber plantation workers as their three-day-old agitation threatened to paralyse the economy.

Tamil organisations, like the Tamil United Liberation Front (TULF) and the All-Ceylon Tamil Congress, have expressed solidarity with the estate workers who are largely of Indian origin.

Supporting "a better deal" for the workers, Colombo's Island newspaper editorially spotlighted that the plantation labour was among the worst affected in the ethnic riots last July and told the Government to negotiate "before the economy, already under siege, is not crippled further by the debilitating effects of inaction in a vital area of the national economy."

Nearly 600,000 workers are at strike, spearheaded by the Ceylon Workers Congress (CWC) and a joint plantation trade union committee. With 15 trade unions behind it, it is the biggest island wide strike action in the plantation sector in a decade.

The police were put on alert to move into the estates when called in by the management, Government sources said.

**Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்